tnkalvi.online

No. of Printed Pages : **6**

6259

Register Number

முதலாம் ஆண்டு

தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி - I

பிரிவு - அ

அனைத்து வினாக்களுக்கும் **100 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

1. இனவெழுத்துகள் என்றால் என்ன ?

2. உருபு மயக்கம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

3. உரிய இடத்தில் வல்லொற்றை இட்டு எழுதுக.
முத்துகுமார் மருந்து கடைக்கு சென்றான் வழியில் நாய்குட்டியை பார்த்தான். அது மகிழ்ச்சியாக இருந்தது. பின்னர் கடையை நோக்கிச் சென்றான். வீட்டிற்கு திரும்பும் வழியில் தன் நண்பனை கண்டான்

4. ''முதல்வர் கருத்து யாதோ'' என்பது எவ்வகை வழுவமைதி ? விளக்குக.

5. அல்வழிப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகா இடங்கள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

6. ''ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை'' - குறட்பாவை உரைநடைப்படுத்தி எழுதுக.

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-first-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

7. பெயர்ச் சொல்லின் வகைகளை எழுதி ஒவ்வொன்றுக்கும் ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

8. மண் + அடுப்பு, மரம் + ஏறினான் சொற்களைச் சேர்த்து எழுதி புணர்ச்சி விதி கூறுக.

9. ''தலைக்கு ஒரு பழம் கொடு'' - இது எவ்வகை ஆகுபெயர் என்பதை விளக்குக.

10. மூன்றாம் வேற்றுமையின் உருபுகளை எழுதி, அவை பயின்று வரும் பொருள்களை எழுதுக.

பிரிவு - ஆ

எவையேனும் 5 வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

பாடலைப் படித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

11. ''வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய் பெய்த
சோறென்று கூழை மதிப்பானும் - ஊறிய
கைப்பதனைக் கட்டிஎன்று உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்''

(1) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?

(2) இன்சொல், கைப்பு ஆகிய சொற்களின் பொருள் யாது ?

(3) மெய்ப்பொருள் கண்டுவாழும் மூவர் யாவர் ?

(4) சோறென்று, மெய்ப்பொருள் - சொற்களைப் பிரித்து எழுதுக.

12. பொதுப்பெயர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

13. ''ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி'' நூற்பாவை விளக்கி எடுத்துக்காட்டு தருக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-first-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

14. கீழுள்ள பாடலைப் படித்து பாடல் பொருளை உரைநடைப்படுத்துக.

''சூரியன் வருவது யாராலே ?
சந்திரன் திரிவது எவராலே ?
காரிருள் வானில் மின்மினிபோல்
கன்னிற் படுவன அவை என்ன ?
பேரிடி மின்னல் எதனாலே ?
பெருமழை பெய்வது எவராலே ?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி
அதைநாம் எண்ணிட வேண்டாமா ?''

15. உரையாடல் என்றால் என்ன ? உரையாடலை செய்தி ஆக்குவதற்கான வழிமுறைகள் யாவை ?

16. பத்தியைப் படித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

''வாழ்வுக்கியைந்த காடுகளும் தமிழ்நாட்டில் அமைந்திருக்கின்றன. மலைகளோடு மிடைந்தும் தனியே சிறந்தும் செறியும் காடுகள், வெயில் தகைந்து அளிக்கும் காரிருள் நீழலும், வண்டு துவைப்பத் தேன் பூங்காவனங்களினின்றும் கமழும் நறுநாற்றமும் வான்பரந்த பொழில்களின் நிரையும் கான் பரந்த தூறுகளின் ஈட்டமும், கொழுங்கொடிகளின் பின்னலும் உள்ளத்தைக் குளிர்விப்பன வல்லவோ ?''

(1) இப்பத்தியின் மையக் கருத்து யாது ?
(2) இப்பத்தியில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்கள் இரண்டினை எடுத்து எழுதி அதற்கான பொருளை எழுதுக.
(3) உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள வர்ணனை சொற்கள் நான்கினை எடுத்து எழுதுக.
(4) இவ்வுரைப் பகுதியின் நடைச்சிறப்பு யாது ?

17. ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதத் தேவையான குறிப்புச் சட்டகம் ஒன்று தயார் செய்து, கட்டுரைக்குப் பொருத்தமான பழமொழிகள், மேற்கோள் பாடலடிகள் இரண்டிரண்டு எழுதுக.

18. ''அறிவை விரிவுசெய் ; அகண்டமாக்கு !
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்து கொள் ! உன்னைச் சங்கமம் ஆக்கு !
மானிடச் சமுத்திரம் நானென்று கூவு !
பிரிவிலை எங்கும் பேதம் இல்லை''

- மேற்கண்ட பாடலடிகளில் இடம்பெற்றுள்ள பொருள் நயத்தை விளக்கி எழுதுக.

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-first-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - II

பிரிவு - அ

அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் **100 வார்த்தைகளுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

19. மொழியின் அடிப்படைத் திறன்கள் யாவை ? அவற்றை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

20. மொழி பழகுதல் - மொழி கற்றல் - வேறுபடுத்துக.

21. ''மொழியே மனிதனுக்கு முகமும் முகவரியும்'' - விளக்குக.

22. நா பிறழ் பயிற்சி என்றால் என்ன ? அதற்கான எடுத்துக்காட்டு இரண்டு தருக.

23. உரைநடைப் பாடத்தைக் கற்பிப்பதற்கான கற்றல் இலக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

24. துணைப்பாடம் என்றால் என்ன ? துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்களில் எவையேனும் நான்கினைப் பட்டியலிடுக.

25. செயல்திட்ட முறை என்றால் என்ன ? அம்முறையில் இடம்பெறும் படிநிலைகள் யாவை ?

26. சிறந்த பாடம் கற்பிப்புத் திட்டத்தின் பண்புகளில் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

27. தாழ்நிலைக் கரும்பலகை என்றால் என்ன ?

28. அடுக்குமொழி நடை என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-first-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x4=20**

29. விதிவரு முறைக்கும், விதிவிளக்கு முறைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை ?

30. கற்பித்தல் குறிப்பு என்றால் என்ன ? அதை ஓர் ஆசிரியர் எழுத வேண்டியதன் அவசியம் யாது ?

31. வகுப்பறை உற்றுநோக்கல் என்றால் என்ன ? பயிற்சி மாணவர்களுக்கு வகுப்பறை உற்றுநோக்கலின் பயன்கள் யாவை ?

32. கற்றல் - கற்பித்தல் பொருள்கள் என்றால் என்ன ? அவற்றின் வகுப்பறை பயன்கள் யாவை ?

33. பேசுதல் திறன் என்றால் என்ன ? திருந்திய பேச்சின் பொருந்திய நல்லியல்புகள் யாவை ?

34. மருங்கொலிகள் என்றால் என்ன ? அவை பிறக்கும் இடங்களை எழுதுக.

35. படித்தலின் வகைகள் யாவை ? அவற்றின் நன்மைகளைப் பட்டியலிடுக.

36. ''செய்யுள் கற்பித்தலின்வழி பண்பாட்டினை வளர்க்க முடியும்'' - என்னுங் கூற்றுக்குப் பொருத்தமான நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

[Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-first-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - III

ஒவ்வொரு வினாவிற்கும் **500 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) விளையாட்டு முறை என்றால் என்ன ? தொடக்கநிலை வகுப்புகளுக்கு விளையாட்டு முறையில் எவ்வாறு தமிழ் கற்பிக்கலாம் என்று விளக்கி எழுதுக.

அல்லது

(ஆ) பிறப்பு அடிப்படையில் மெய்யொலிகளை வகைப்படுத்தி எழுதுக.

38. (அ) பல்வகுப்பு கற்பித்தல் முறை பற்றி விளக்கி எழுதுக.

அல்லது

(ஆ) செய்யுள் உரைநடைப் பாடங்களைக் கற்பிக்கும் முறைகளில் உள்ள வேறுபாடுகளை விளக்கி எழுதுக.

- o 0 o -

tnkalvi.online